Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.164/2022 Date: 13.11.2025
Deposition of witness for prosecution: PW4 ( LW2)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | செல்வகுமார் | Village | அனுமந்தன்பட்டி |
| Father/ Husband Name | வீரணன் | Taluk | உத்தமபாளையம் |
| Age | 55/2025 | Calling | ஓட்டுநர் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 13.11.2025 TIME 12.25 **PM**

**எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை :–**

சுமார் 2 வருடங்களுக்கு முன்பு 29–ம் தேதி 5–வது மாதம் இரவு 09.30–10.00 மணியளவில் நான் அனுமந்தன்பட்டியில் உள்ள ஆஞ்சநேயர் கோவில் அருகே உள்ள கூரை கடையில் டீ சாப்பிட்டு கொண்டிருந்த போது, கம்பம்– உத்தமபாளையம் நோக்கி Splender இருசக்கர வாகனத்தில் ஒரு நபர் ஓட்டி வந்தார். அவருக்கு பின்னால் ஒரு பெண்மணி அமர்ந்திருந்தார். உத்தமபாளையம்– கம்பம் நோக்கி வந்த ஈச்சர் Max Cap வாகனம் அதிவேகமாக வந்து வலது புறமாக ஏறி வந்து மேற்படி Splender இருசக்கர வாகனத்தை மோதி விபத்து ஏற்பட்டது. டம் என்று சத்தம் கேட்டவுடன் நான், முத்து, கடைக்காரர் ஓடிச்சென்று, இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபரை தூக்கி பார்த்தோம். முகத்தில் காயம் இருந்தது, பின்னால் அமர்ந்து வந்த பெண்ணுக்கும் முகத்தில் காயம் இருந்தது, இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபரை குறித்து விசாரித்த போது கூடலூரை சேர்ந்த விக்கி என்றும், பின்னால் அமர்ந்து வந்த பெண்ணின் பெயர் செல்வி என்றும், என தெரியவந்தது. ஈச்சர் வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநர் இறங்கி வந்தார். அங்கே இருந்த நபர்கள் அந்த ஓட்டுநரிடம் விசாரித்த போது அவரது பெயர் முத்து என கூறினார். பின்னர் காயம்பட்ட நபர்களை 108 ஆம்புலன்ஸ் மூலம் உத்தமபாளையம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம், ஈச்சர் வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநரை பார்த்தால் அடையாளம் காட்டயியலும். (எதிரி ஆஜரின்மையால் முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.
Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.